ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1840/20 - 2013 දෙසැම්බර් 10 වැනි අඟහරුවාදා - 2013.12.10
**1840/20 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

2013 ஆம் ஆண்டின் 381 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : 4- 3/9/2012/டபிள்யூஎஸ்/55.
பிர.செ. குறிப்பு இல. : எஸ்/வீ/எல்பீ/ஏஎபீ/பயிர்ச்செய்கை/2012.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.12.04.

அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், வவுனியா.

2. **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், வவுனியா மாவட்டத்தில், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், இல. 218ஔ, சாஸ்திரிகூழாங் குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில், சாஸ்திரிகூழாங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2012.07.25 ஆந் திகதிய வீஏ/வீஏவீ/2012/051-054 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ', 'பீ', 'சீ', 'டீ' எனக் காட்டப்பட்ட சுமார் 2.1967 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த நான்கு (04) காணித்துண்டுகள் :

01. **துண்டு 'ஏ' - பெரியகுளங்காடு - விஸ்தீரணம் : 0.3982 ஹெக்டயார்**
வடக்கு : எஸ். மௌலேஸ்வரன் உரிமை கோரும் பெரியகுளங்காடு மற்றும் அடிப்பாதை ; கிழக்கு : அடிப்பாதை; தெற்கு : துண்டு பீ ; மேற்கு : இக் காணியின் எஞ்சிய பகுதி.

02. **துண்டு 'பீ' - பெரியகுளங்காடு - விஸ்தீரணம் : 0.5929 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு ஏ ; கிழக்கு : அடிப்பாதை; தெற்கு : துண்டு சீ ; மேற்கு : இக் காணியின் எஞ்சிய பகுதி.

03. **துண்டு 'சீ' - பெரியகுளங்காடு - விஸ்தீரணம் : 0.6270 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு பீ ; கிழக்கு : அடிப்பாதை; தெற்கு : துண்டு டீ ; மேற்கு : இக் காணியின் எஞ்சிய பகுதி.

04. **துண்டு 'டீ' - பெரியகுளங்காடு - விஸ்தீரணம் : 0.5786 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு சீ ; கிழக்கு மற்றும் தெற்கு : அடிப்பாதை; மேற்கு : இக் காணியின் எஞ்சிய பகுதி.

12-1048

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.